அ.வ.எண்: 112/2014 நாள்: 14.07.2026

பி.வா.சா.1 – ஜேம்ஸ்

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

1. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் முதலாவது முத்தையா என்கிற முத்துசாமி குமாரர் வேலு என்கிற வேலுச்சாமி அம்பலம் என்று வருகிறதா என்றால் இல்லை. நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் பெயர் ஒற்றுமையை பயன்படுத்தி அக்கிரம லாபம் அடைவதற்காக முத்தையா என்கிற முத்துசாமிக்கு, வேலு என்கிற வேலுச்சாமி அம்பலம் என்ற மகன் இருந்ததாக கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகள் வேறு ஒரு சொத்தை வேறு ஒரு நபருக்கு கிரயம் கொடுத்து அந்த நபரிடம் இருந்து என் மனைவி பெயரில் கிரயம் பெற்ற கிரைய ஆவணத்தை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்தாலே நான் பெற்ற கிரைய ஆவணம் செல்லதக்கதல்ல என்று தெரிந்துவிடும் என்பதால் மேற்படி ஆவணத்தை தாக்கல்

செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

2. தாவா சொத்துக்களுக்கு 2025 ஆம் ஆண்டு தான் மனு கொடுத்து எனது பெயருக்கு பட்டா மாற்றம் செய்து கொண்டேன் என்றால் சரிதான். அது சம்பந்தமாக வாதி எனக்கும், வருவாய் துறை அதிகாரிகளுக்கும் வழக்குரைஞர் அறிவிப்பு அனுப்பி இருந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றும், அதில் உள்ள சங்கதிகளை தெரிந்து கொண்டு நான் அதை வாங்க மறுத்து திருப்பி அனுப்பி விட்டேன் என்று சொன்னால் சரியல்ல, நான் அப்போது சென்னையில் இருந்தேன் இங்கு யாரும் இல்லாததால் அந்த அறிவிப்பை யாரும் வாங்கவில்லை. நான் எவ்வளவு காலமாக சென்னையில் இருந்து வருகிறேன் என்றால் 2003 ஆம் ஆண்டில் இருந்து சென்னையில் இருந்து வருகிறேன்.

3. நான் 2014 ஆம் ஆண்டில் தாவா சொத்தை கிரையம் வாங்கியதிலிருந்து அதை நான் அனுபவம் செய்யவில்லை என்றும், அது எங்கு உள்ளது என்று எனக்கு தெரியாது என்றும், நான் சொல்வது போல் சென்னையில் தான் இருந்து வருகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் விவசாயம் செய்து பயிர் காப்பீடு வாங்கியதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றும், அவ்வாறு இருந்திருந்தால் அவற்றை நான் நீதிமன்றத்தில் தாக்கல்

செய்திருப்பேன் என்றும் சொன்னால் சரியல்ல. அவ்வாறு விவசாயம் செய்திருந்தால் நான் பட்டா பெற்று இருக்க வேண்டும் என்றும், நான் எனது செல்வாக்கை பயன்படுத்தி 2025 ஆம் ஆண்டு தான் பெற்றேன் என்றும், அதனால் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் 2014 ஆம் ஆண்டு தாவா சொத்தை கிரையம் பெற்ற உடனே வாதி இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.

4. வாதி வழக்கு தாக்கல் செய்து வருவாய் துறையினருக்கு மனு கொடுத்ததால் தான் 2014 ஆம் ஆண்டிலிருந்து பலமுறை நான் மனுக்கள் கொடுத்தும் என் பெயரில் பட்டா மாற்றம் ஏற்படவில்லை என்றும், தற்போது 2025 ஆம் ஆண்டில் தான் மேற்படி விவரங்களை மறைத்து நான் பட்டா மாற்றம் பெற்றேன் என்று சொன்னால் சரியல்ல. நான் 24.08.2025 அன்று தான் தாவா சொத்திற்கு பட்டா மாற்றினேன் என்று சொன்னால் சரிதான். நான் வாங்கி உள்ள கிரைய பத்திரத்தில் வேலு அம்பலத்தின் ஒரு மகளைத்தான் காண்பித்துள்ளார்கள் என்றும், புஷ்பவள்ளி என்ற மற்றொரு மகளை காண்பிக்கவில்லை என்றும் சொன்னால் சரிதான், அப்போது அவருக்கு உடல்நிலை சரியில்லை. புளிக்குளம் கிராமத்தில் உள்ள அருளானந்து மகன் அருளானந்தை எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

5. மேற்படி அருளானந்து என்பவருக்கு எனக்கு கிரையம் கொடுத்த வளர்மதி என்பவர் புஷ்பவள்ளியுடன் சேர்ந்து தாவா சொத்து நீங்கலாக 3 இலக்க சொத்துக்களை பதிவுக் கிரையமாக கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் செல்லச்சாமி அம்பலம் மகன் முத்துகிருஷ்ணன் அம்பலம், முத்தையா அம்பலம் மகன் வேலுச்சாமி அம்பலம், வெள்ளைச்சாமி அம்பலம் மகள் கருப்பாயி ஆகியோர் பெயரில் கூட்டுப் பட்டவாக இருந்தது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. அதில் முத்தையா அம்பலம் மகன் வேலுச்சாமி அம்பலத்தின் வாரிசுகள் தான் மேற்படி 3 இலக்க சொத்துக்களையும் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேலும் அதில் முத்தையா அம்பலம் மகன் வேலுச்சாமி அம்பலம் 24.12.1989–ல் இறந்து விட்டதாக கூறி இறப்பு சான்றிதழை இணைத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6. முத்தையா அம்பலம் மகன் வேலுச்சாமி அம்பலத்திற்கு உடன்பிறந்த சகோதரர் ஒருவர் உள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வேலுச்சாமி அம்பலத்திற்கு இடும்பன் அம்பலம் என்ற சகோதரர் உள்ள விபரம் எனக்கு தெரியும் என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.14 கிரைய பத்திரத்தை அருளானந்திற்கு ஏற்படுத்திக் கொடுக்கும் பொழுது வேலுச்சாமி அம்பலத்தின் சகோதரரான

இடும்பன் அம்பலத்தை மறைத்து தான் எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.7 ஆவணத்தில் புஷ்பவள்ளியை காட்டாததற்கு அவருக்கு உடல்நிலை சரியில்லாத தான் காரணம் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் 2015 ஆம் ஆண்டு கிரையம் கொடுக்கும் போது அந்த ஆவணத்தில் புஷ்பவள்ளியும் சேர்ந்து கையெழுத்து செய்துள்ளார் என்றும், நான் அவருக்கு உடல்நிலை சரியில்லை என்றும் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

7. தாவா சொத்துக்கள் உண்மையிலேயே முத்தையா அம்பலம் மகன் வேலுச்சாமி அம்பலத்திற்கு பாத்தியப்பட்டதாக இருந்திருந்தால் எனக்கு கிரயம் கொடுக்கும் பொழுது இடும்பன் அம்பலம் மற்றும் புஷ்பவள்ளி ஆகியோர் கையெழுத்து செய்திருக்க வேண்டும் என்றும், அந்த சொத்து அவர்களுக்கு பாத்தியம் இல்லாததால் தான் 1,2 பிரதிவாதிகள் மோசடியான கிரைய ஆவணத்தை எனக்கு உற்பத்தி செய்து கொடுத்துள்ளார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.14 ஆவணத்தை பற்றிய விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால், மேற்படி கிரைய ஆவணம் ஏற்படுத்தப்பட்ட 1 முதல் 1 1/2 வருட காலத்திற்குள் எனக்கு தெரியும். மேற்படி 3 இலக்கச் சொத்துக்களை தான் எனது மனைவி பெயரில் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் 1,2

பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது இல்லை என்று எனக்கு 2015 ஆம் ஆண்டு தெரியும் என்றும் தெரிந்திருந்தும் வாதிகளுக்கு வீண் தொல்லை கொடுப்பதற்காக இவ்வழக்கில் எதிர்வழக்காடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

8. தாவா சொத்துக்களின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும், சர்வே எண் 518/6 மற்றும் 528/5 ஆகும். மேற்படி சொத்துக்கள் இரண்டும் வாதியின் தகப்பனாரான முத்துசாமி அம்பலம் மகன் வேலு அம்பலத்திற்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். அதன் அடிப்படையில் தான் மேற்படி சொத்துக்களுக்கு பட்டா எண்.1781 இல் அவரது பெயரில் இருந்தது என்றும், அதற்கான 10(1)–ஐ வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளோம் என்றும் சொன்னால் சரிதான். அதேபோன்று வா.சா.ஆ.2 ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள 2014 ஆம் ஆண்டிற்கான 10(1)–ல் தாவா சொத்துக்கள் வாதியின் தகப்பனாரான முத்துசாமி அம்பலம் மகன் வேலு அம்பலம் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் தனக்கு பாத்தியப்பட்டதால் தான் தன் தகப்பனாரை தொடர்ந்து தன் பெயருக்கு பட்டா மாற்றம் செய்து தரும்படி 1–ம் வாதி 2007 ம் ஆண்டில் வட்டாட்சியர், வருவாய் கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சியர் ஆகியோருக்கு வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.5 ஆவணங்களான மனுவை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால்

சரியல்ல.

9. தாவா சொத்துக்கள் மற்றும் பல சொத்துக்களை சேர்த்து 1–ம் வாதியின் சகோதரியான சீதை என்பவர் 1–ம் வாதி தனலெட்சுமிக்கு 24.08.1963 அன்று பதிவு செய்யப்பட்ட இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் (ஆவண எண்.1145/1963) ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆவணம் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்துகளுக்கு SLR காலத்தில் வாதியின் தகப்பனார் ஆன முத்துசாமி அம்பலம் மகன் வேலுஅம்பலம் பெயரில் தான் பதிவுகள் இருந்தது என்றும் அதனை வாதிகள் தங்கள் தரப்பு ஆவணமாக வா.சா.ஆ.8 ஆக தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களுக்கு 2018 ஆம் ஆண்டிற்கான 10(1)–ஐ 1–ம் வாதியின் தகப்பனார் பெயரான முத்துசாமி அம்பலம் மகன் வேலு அம்பலம் என்பவர் பெயரில் வா.சா.ஆ.9 ஆவணமாக தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

10. தாவா சொத்துக்கள் எனக்கு கிரையம் கொடுத்த முத்தையா அம்பலம் மகன் வேலுச்சாமி அம்பலம் செல்லச்சாமி அம்பலம் மகன் முத்துகிருஷ்ணன் அம்பலம் மற்றும் வெள்ளைச்சாமி அம்பலம் மகள் கருப்பாயி ஆகியோர் பெயரில் பட்டா எண். 2122–ல் கூட்டு

பட்டாவாக இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆவணத்தை வாதி தரப்பில் வா.சா.ஆ.10 ஆவணமாக தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதிகள் மேற்படி வேலு அம்பலத்தின் வாரிசுகள் என்று நிருபணம் செய்வதற்காக வா.சா.ஆ. 11 ஆவணமாக குடும்ப அட்டை தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து நீங்கலாக மற்றொரு சொத்திற்கு முத்தையா அம்பலம் மகன் வேலுச்சாமி அம்பலம் முத்தையா அம்பலம் மகன் இடும்பன் அம்பலம் மற்றும் செல்லச்சாமி அம்பலமகன் முத்துகிருஷ்ணன் ஆகியோர் பெயரில் கூட்டு பட்டாவாக பட்டா எண். 2150 இருந்தது என்றும் அது வா.சா.ஆ.12 ஆவணமாக உள்ளது என்றும் சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

11. மேற்படி ஆவணத்தில் வேலுச்சாமி அம்பலத்தின் உடன்பிறந்த சகோதரரான இடும்பன் அம்பலத்தின் பெயர் காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் எனக்கு கிரையம் கொடுத்த முத்தையா அம்பலம் மகன் வேலுச்சாமி அம்பலம் செல்லச்சாமி அம்பலம் மகன் முத்துகிருஷ்ணன் அம்பலம் மற்றும் வெள்ளைச்சாமி அம்பலம் மகள் கருப்பாயி ஆகியோர் பெயரில் பட்டா எண். 2122–ல் 2003–ல் கூட்டு பட்டாவாக இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

வாதிகள் தாவா சொத்து உள்ள ஊரில் தான் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். அங்கு இருப்பதை காட்டுவதற்காக அவர்களின் ஆதார் அட்டையை வா.சாஆ.16 ஆக குறியீடு செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 06.11.1958–ல் தாவா சொத்துக்கள் மற்றும் பிற சொத்துக்களை பொறுத்து 1–ம் வாதியின் தாயாரான காளியம்மாள் 1–ம் வாதியின் சகோதரி ஆன சீதை அம்மாளுக்கு எழுதிக்கொடுத்த உயில் சாசனம் ஆன வா.சாஆ.17 பற்றி தெரியுமா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

12. தாவா சொத்துக்கள் முத்தையா அம்பலம் மகன் வேலு அம்பலத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், நான் அதை தவறுதலாக வேற நபர்களிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. அதனால்தான் வாதிகள் முத்தையா அம்பலம் மகன் வேலு அம்பலத்தின் பெயரில் உள்ள மற்ற சொத்துக்களுக்கான 10(1) அடங்கலை வாதிகள் தாக்கல் செய்தவர்கள் என்றால் சரியல்ல. மற்ற கிரைய ஆவணங்களில் முத்தையா அம்பலம் மகன் வேலுச்சாமி அம்பலத்துடன் சேர்த்து மற்ற வாரிசுகளான இடும்பன் அம்பலம் புஷ்பவள்ளி ஆகியோர் கையெழுத்து செய்தனர் என்றும், ஆனால் நான் கிரையம் வாங்கிய கிரைய பத்திரத்தில் அவர்கள் கையெழுத்து செய்யவில்லை என்றும்,

அந்த சொத்தை அவர்களுக்கு பாத்தியம் இல்லாததால் தான் அவர்கள் கையெழுத்து செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. உண்மையிலேயே தாவா சொத்துக்கள் முத்தையா அம்பலம் மகன் வேலுச்சாமி அம்பலம் பெயரில் இருந்திருந்தால் புஷ்பவல்லி மற்றும் இடும்பன் அம்பலம் ஆகியோர் ஆட்சேபனை தெரிவித்து இருப்பார்கள் என்றும் அது அவர்களுக்கு பாத்தியம் இல்லாததால் தான் அவர்கள் ஆட்சேபனை செய்யவில்லை என்றும் இது மோசடியான கிரைய பத்திரம் என்றும் சொன்னால் சரியல்ல.

13. தாவா சொத்துக்கள் வாதிக்கு பாத்தியப்பட்டதால் தான் 1958 ஆம் ஆண்டிலிருந்து வாதிகளின் பெயரில் பதிவுகள் உள்ளது என்றும், அனைத்து ஆவணங்களிலும் முத்துசாமி அம்பலம் மகன் வேலு அம்பலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. எனது எதிர்வழக்குரையில் சொல்லாத ஆவணங்களான பிவாசாஆ.1 முதல் 4 ஆவணங்களை வாதிகளை மோசடி செய்யும் பொருட்டு 14 ஆண்டுகள் கழித்து இரண்டாம் வாதியிடம் இருந்து ஆவணங்களை பெற்று தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. அதேபோன்று பட்டா பாஸ் புத்தகத்தில் உள்ள முத்துசாமி அம்பலம் மகன் வேலு அம்பலம் என்பது 1ம் வாதியின் தந்தை பெயர் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பட்டா பாஸ் புத்தகத்தில் ஒரு பேப்பரை ஒட்டி சர்வே எண்.526/5 க்கு முத்தையா அம்பலம் மகன்

வேலு அம்பலம் என்று மோசடியாக உற்பத்தி செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

14. நான் தாக்கல் செய்துள்ள யூடிஆர் பட்டாவானது 1ம் வாதியின் தகப்பனார் பெயரில் உள்ளது என்றும் நான் சொல்வது போல் அது 1ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயருக்கானது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. பட்டா எண் 2040 இல் வேறு சொத்துக்களுக்கு முத்தையா அம்பலம் மகன் வேலுச்சாமி அம்பலம் மற்றும் இடும்பையா அம்பலம் மகன் ஆதீனம்மிளகி அம்பலம் என்றும் வேறு சொத்துக்களுக்கு கூட்டு பட்டா உள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. பட்டா எண். 1782 இல் முத்தையா அம்பலம் மகன் வேலுச்சாமி அம்பலம் என்று தனிப்பட்டா உள்ளது என்றும் சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து அல்லாத மற்ற சொத்துக்களை கிரயம் கொடுத்தபொழுது வாதியின் மூதாதையர்களின் இறப்பு சான்றிதழ் வாரிசு சான்றிதழை இணைத்துக் கொடுத்தார்கள் என்றும் ஆனால் நான் கிரயம் பெற்ற கிரைய பத்திரத்தில் அவ்வாறு இணைக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

15. நான் பட்டா மாற்றம் செய்வதற்கு முன்பாக 1ம் வாதியின் தகப்பனாரின் பெயரான முத்துசாமி அம்பலம் மகன் வேலு அம்பலம் பெயரில் தான் இருந்தது என்றும் நான் 2025 ஆம் ஆண்டில் தான்

பட்டா மாற்றம் செய்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகளை எனது தரப்பு சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். 1ம் பிரதிவாதி ஒருவர் மட்டும் தான் இங்கு உள்ளார் மற்றொருவர் தற்போது சிங்கப்பூரில் உள்ளார். அவர்களை நான் விசாரிக்காத பட்சத்தில் வாதி தரப்பில் அவர்களை விசாரணை செய்வதற்கு எனக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு முன்பாக 1,2 பிரதிவாதிகளை விசாரித்து இருந்தால் தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்று தெரிந்திருக்கும் என்றும் அதனால் தான் அவர்கள் விசாரணைக்கு ஆஜராகவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

16. அதனால்தான் மேற்படி 1,2 பிரதிவாதிகள் அசல் வழக்கில் எதிர் வழக்காடி விட்டு விசாரணைக்கு ஆஜராகவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் வாதியின் தகப்பனார் முத்துசாமி அம்பலம் மகன் வேலு அம்பலம் ஒரே வாரிசு என்றும் 1ம் பிரதிவாதியின் தகப்பனாரான முத்தையா அம்பலம் மகன் வேலுச்சாமி அம்பலம் உடன் இடும்பன் அம்பலம் (சகோதரர்) என இரண்டு வாரிசுகள் உள்ளனர் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. அதனால் தான் தாவா சொத்திற்கு 1ம் வாதியின் தகப்பனார் பெயரில் பதிவுகள் இருந்து வந்தது என்றும் நான் பிரதிவாதியின் மூதாதையரிடம் கிரயம் பெற்று

வாதியின் மூதாதையர் பெயரை காண்பித்து பட்டா மாற்றம் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் பெற்ற கிரைய பத்திரத்திலும் 1ம் வாதியின் தகப்பனார் பெயரில் உள்ள 10(1)–ல் காண்பித்து தான் கிரயம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல.

17. வா.சா.ஆ.14 ஆவணத்தில் முத்தையா அம்பலம் மகன் வேலுச்சாமி அம்பலம் என்பவர் பெயரில் உள்ள 10(1)– யை காண்பித்து கிரையம் ஏற்படுத்தியுள்ளார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அதனால் பிராதுபடி வாதிகளுக்கு தீர்ப்பு கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.07.14 16:26:01 +0530